IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஐங்குறுநூற்றில் நெய்தல் நிலத்தலைவியின் பிரிவுவாற்றாமையும், பின்புலமும்

திருமதி. கு.தமிழரசி,

முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்),

ஸ்ரீவித்யா மந்திர் கலை(ம) அறிவியல் கல்லூரி,

கட்டேரி-அஞ்சல், ஊற்றங்கரை-வட்டம்,

கிருஷ்ணகிரி-மாவட்டம் 636902.

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்இலக்கியங்கள் காலந்தோறும் கடைப்பிடித்தொழுகத்தக்க அறநெறிகளை வலிமையுடன் பதிவுசெய்து வருகின்றன. காலங்கள் மாறிய போதும் மானுட வாழ்வின் உண்மையான அசைவுகள் அர்த்தமுடையதாகவே பரிணமிக்கின்றன. சங்கஇலக்கியம் இன்றைய காலத்தேவையை உணர்ந்து அறிவுத் தேடலின் ஆதாரமாகத் திகழ்கின்றது. இயற்கை அழகை வெளிப்படுத்தவும், தம் உணர்ச்சிகளைக் காட்டவும், பல அரிய செய்திகளை, கருத்துக்களை வெளிக்கொணரவும், தம் கருத்துக்குப் பின்னணியை அமைக்கவும் புலவர்கள் தங்கள் இலக்கியங்களில் சங்ககாலம் முதல் இன்றுவரை இயற்கையை இணைத்துப் பாடியுள்ளனர். அவ்வகையில், "**ஐங்குறுநூற்றில் நெய்தல் நிலத்தலைவியின் பிரிவுவாற்றாமையும், பின்புலமும்**" பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**திறவுச்சொற்கள்**: நெய்தல் நில வாழ்வியல், தலைவனின் பிரிவு, தலைவியின் பிரிவுவாற்றாமை, வருந்தும் பின்புலக் காட்சிகள்

## முன்னுரை

பண்டைய தமிழர்களின் பழக்க வழக்கம், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றை எடுத்து உணர்த்தும்; வாழ்வியல் இலக்கணம் தொல்காப்பியம். தொல்காப்பியரின் இலக்கண மரபைப் பின்பற்றியே சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் அமைந்துள்ளன. அக்கால மக்களின் வாழ்வியலைப் பாடுபொருளாகக் கொண்டு புலவர்கள் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். உலக மொழிகளில் தனிப்பெருஞ் சிறப்பினைப் பெற்ற தமிழ்மொழியின் தனித்துவத்திற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் துணையாகின்றன. இச்சங்க இலக்கியங்கள் பாடற் பின்னணிக்கு இயற்கையும், முதல், கரு, உரிபொருள்கள் பின்புலமாக அமைந்து காணப்படுகின்றன.

மனிதனின் நடத்தையையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தும் வகையில் இயற்கைக் காட்சிகளும், அஃறிணை உயிர்கள் குறியீடாகவும், உட்பொருளாகவும் பல்வேறு காட்சிகள் அகப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில், பின்புலக்கூறுகள் சங்கப்பாடல்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆகவே, “**ஐங்குறுநூற்றில் நெய்தல் நிலத்தலைவியின் பிரிவுவாற்றாமையும், பின்புலமும்**”பற்றி இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

**நெய்தல் நிலம்**

கடலும் கடல்சார்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். கடலை ஒட்டி அமைந்துள்ள கடற்கரை அகழிகளும், சோலைகளும் நெய்தல் நிலப் பரப்புடன் அடங்கும். திரை என்பது நெய்தல் நிலத்திற்குரிய கடலையும் குறிப்பதாகும். இக்கடற்கரையைப் பின்புலமாகக் கொண்ட நெய்தல் திணையை,

“வருணன் மேய பெருமணல் உலகம்”1

என்கிறது தொல்காப்பியம். மேலும், ஐங்குறுநூறு இதனை,

“நெய்தல் மயக்கி வந்தன்று நின் மகள்”2

என்கின்றது. இது கடலையும் கடல் சார்ந்த பகுதியையும் குறிக்கும். இங்கு வாழும் மக்கள் பரதவர், நுளையர், சேர்ப்பன், என அழைக்கப்படுகிறார்கள்.

**நிலத்தலைவனின் உணர்வுக் காட்சி**

நெய்தல் பாடல்கள் கடற்கரையைப் பின்புலமாகக் கொண்டு தலைவன் தலைவியின் வாழ்வியலைக் காட்டுவன. இக்கடற்கரையும் அங்குள்ள பறவைகள், மரம், செடி, கொடிகள் போன்றவையும் நெய்தல் நில மக்களின் வாழ்வியலுக்குப் பின்புலமாக அமைகின்றன.

தலைவியைப் பிரிந்த தலைவன் பல்வேறு உணர்வுகளுக்கு ஆட்படுகிறான். அவ்வுணர்வுகள் அந்தந்த சூழலுக்கேற்றவாறு வெளிப்பட்டு அவனின் மன் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. களவொழுக்கம் மேற்கொண்ட தலைவனுக்குத் தலைவியைக் காணவேண்டுமென்று உள்ளம் துடிப்பதும், அவளைக் கண்டாள் இன்பம் தோன்றுவதும், அவளைக் காணாநிலை ஏற்பட்டால் வேட்கை மிகுதியால் ஆற்றாமை தோன்றுவதும் இயல்பு. தலைவன் தலைவியைக் களவில் கூடி மகிழ்ந்த போதும், அவளை இற்செறிப்பில் வைத்தபோதும் காணஇயலாது துன்புறும் நிலையிலும் காட்சிகளைக் கூறுகிறான்.

**தலைவியின் கூதிர்காலக் கலக்கம்**

கார்காலத்தின் பின்னதாகிய கூதிர்ப் பருவமழை, குளிரைத் தரும் வாடைக் காற்றோடு கலந்து பெய்தது. கார்காலத்தில் வருவதாகக் கூறிச்சென்ற தலைவன் இல்லாமையால் தலைவி உடல்வேறுபட்டு உள்ளம் மயங்கிய ‘தன்னைக் கொல்வதையே நோக்கமாகக் கொண்டு’இக்கூதிர் காலமும் வந்ததாகக் கலங்குகிறாள். இதனை,

“நீர் எதிர் கருவிய கார்எதிர் கிளை மழை
ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே”3

என்ற குறுந்தொகைப் பாடல் விளக்குகின்றது.

**மாலை நேரக் காட்சி**

துன்பம் தரும் மாலை நேரக்காட்சி மற்றொரு பாடல் விளக்குகின்றது. கதிரவன் மேற்கு வானத்தில் சாய்ந்து மறைந்து விட்டான். வளைந்த சிறகுகளை உடைய பறவைகள் விரைந்து பறந்து செல்கின்றன. அவை, மாலைக்காலத்துக் காட்சி ஒன்றைப் பற்றிப் பாடியதாகத் தோன்றுகின்றது. ஆனால், குஞ்சுகளுக்கு இரைகொண்டு பறக்கும் பறவைகளைப் பற்றி பாடியது அன்று. தலைவனது பிரிவை நினைத்து வருந்தும் தலைவியின் துயரத்தை வெளிப்படுத்தும் விதமாக இப்பாடல் அமைகின்றது.

மாலையில், தன் குஞ்சுகளுக்கு இரைதரும் பறவைகள், தலைவனுக்குத் தன் தலைவியின் நினைவுகளைத் தூண்டுகின்றன. அதனால், அக்காட்சியைக் கண்ட தலைவன் தலைவியை நினைத்து உடனே வருவான் என்பதனை வெளிப் படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது. கார்கால மாலைப் பொழுதில் தனித் திருப்போர் அடையும் துன்பத்தை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

"கார்தொடங் கின்றே காலை; காதலர்
வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை
வென்றி வேட்கையொடு நம்முள் உள்ளார்"4

என்ற பாடல்கள் தனித்திருப்போருக்கு ஆற்றாமையை மிகுவிக்கும் கார்கால மாலைப்பொழுதில், பொருள் தேடச் சென்ற தலைவன் வாராததால் தலைவி வருத்தமடைவதை விளக்குகின்றன.

**துயரைத் தூண்டும் காட்சி**

தலைவன் களவில் தலைவியைக் காணஇயலாத இச்சூழலில் மடலேறக் கருதிய நிலையில் தோழியிடம் அலர் மடலைத்தந்தது, மறையும் கதிரவன் துன்பத்தைத் தந்தது. வாடைக்காற்று வீசுதலால் கூட்டிலே தன் பெடையோடு புணர்ந்திருக்கும் அன்றிலின் குரல் இரவெல்லாம் கையறவைத் தந்தது என்று இயற்கையின் நிகழ்வுகள் அவனின் மனநிலைக்குத் தக்கவாறு துயரைத் தூண்டியது. இந்நிலையை,

“வடந்தை துவலை தூவக் குடம்பைப்
பெடைபுணர் அன்றில் உயங்குகுரல் அளைஇத்
எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண் துளி வீசிப்
பயலை செய்தன பனி படு துறையே”5

எனும் பாடலடிகள் புலப்படுத்துகின்றது. இதன்வழி இயற்கைக்காட்சிகளும் அன்றிலின் குரலும் தலைவனுக்குத் துன்பத்தை மிகுவிக்கச் செய்யுமென்பதை அறியமுடிகிறது. “களவுக்காலத்தே தலைவனும், தலைவியும் கூடியும் வாழ்வர்.”6 பிரிந்து வாழும்நிலையில் அப்பிரிவினைத் தாங்காமல் தலைவி வருந்துவதே மிகுதியும் சுட்டப்படும் நிலையில் தலைவனும்,

“யாங்கா வென்கொல் அளியென் யானே”7

என்று புலம்புதலும் குறிப்பிடத்தக்கது.

**துன்பம் தந்த பின்புலக் காட்சி**

புல்லென்ற கடற்கரை தலைவிக்குத் துன்பம் தந்தது. தம் கூடு நோக்கிப் பறக்கும் பறவைகளும், இதழ்குவிக்கும் பூவினங்களும், வெறிச்சோடும் கடற்கரைச்சோலையும், இவளைப் போலவே மயக்கமுற்றுப் பொலிவிழக்கும் வானமும் இவையெல்லாம் தனிமையில் இருக்கும் தலைவியின் துன்பத்தைப் பெரிதாக்குகின்றன. கடற்கரை துன்பம் தந்த பின்புலக் காட்சியினை,

“கோடு புலம் கொட்பக் கடல் எழுந்து முழங்கப்
பாடு இமிழ் பனித் துறை ஓடு கலம் உகைக்கும்
துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன
வீங்கின மாதோ தோழி, என் வளையே”8

என்ற பாடலும்,

“புள்ளும் புலம்பின, பூவும் கூம்பின
கானலும் புலம்புநனி உடைத்தே வானமும்
நம்மே போலும் மம்மர்த்து ஆகி
எல்லை கழியப் புல்லென்றன்றே”9

என்ற பாடலும் தலைவியின் பிரிவுத் துன்பத்தை மிகுதியாக வெளிப்படுத்துகின்றது. கதிரவன் மறைதலால் மலர்களும் கூம்பிவிட்டன. இயற்கை, அமைதி கொண்டது. ஆனால், தலைவி மட்டும் வருந்தினாள். என்பதனை,

“...புன்கண்கூர் மாலைப் புலம்பும்என் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால் நீ எய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக்காண் டறிதியோ”10

என்று சிலப்பதிகார கானல்வரி அடிகளும் துன்பம் தரும் மாலைப்பொழுதை விளக்குகின்றன. இந்நிலையில், குளிர்ச்சியுடைய பனித்துளிகளையும், கடுமையான வெப்பமாகத்தூவும் திங்களும், மாலையுமே தனக்கு வருத்தத்தை ஏற்படுத்துவதாகத் தலைவி கூறுகிறாள். இதனை,

“.....மாலையோ அறிவேன் மன்னே - மாலை
நிலம் பரந் தன்ன புன்கணொடு
புலம்பு உடைந்து ஆகுதல் அறியேன் யானே”11

என்னும் இப்பாடல் தலைவியின் பிரிவுத் துன்பம் திங்கள் மீதும், மாலைப் பொழுதின் மீதும் ஏற்றி வெளிப்படுத்தப்படுகின்றது. அந்நிலையில், காற்று துன்பத்தை ஏற்படுத்துவ தாக அமைய தன்துன்பத்தால், காற்றைப்பழி கூறுவதாக இப்பாடல் அமைகின்றது. இதனை,

“......தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர், நம் காதலர்”12

எனத், தலைவன் குறித்த காலம் கழிந்ததால் தலைவியின் துன்பம் மிகுதியாகின்றது. ஆனால், கூதிர்காலத்தில் வீசும் வாடைக்காற்றே தம் உயிரைப் போக்கும்படி துன்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

## தலைவியின் பிரிவாற்றாமை

களவுக் காலத்தில் கடற்கரை சோலையில் மாலைப் பொழுதில் காத்திருந்த தலைவி, தலைவன் வராததால் ஆற்றாது வருந்தினாள். தான் துன்பத்தால் தோழியும், தலைவி துயர் கூறுவதைக்கண்டு தோழியும், நம்மை பிரிந்த தலைவரை எண்ணி அவர் பிரிவிற்காக மிகவருந்தி நம் அரிய உயிர் நீங்கி போவதாயினும், துன்பம் பிறருக்கு புலனாகாதவாறு நாம் மறைத்து

கொள்ளவேண்டும் என்று தன் ஆற்றாமையுடன் உரைப்பதைக் காட்சிப்படுத்துகின்றார். இதனை,

"முகைமுகம் திறந்தன்ன, முறுவலும் கடிகல்லாய்
என ஆங்கு
மாலையும் அலரும் நோனாது, எம்வயின்
நெஞ்சமும் எஞ்சும்மன் தில்ல எஞ்சி,"13

எனும் பாடலடிகள் இதனைத் தெரிவிக்கின்றன. தலைவன் பிரிவால் தலைவி அடைந்த தனிமைத்துயரம், தோழியின் வருத்தம், தலைவி தன் துயரங்களை அடக்கிக்கொள்வதிலும், மிகத்தெளிவாக உணர்த்து-கின்றன. தலைவன் பிரிவை தாங்காமல் தலைவி மாலைப்பொழுது கண்டு அதனுடன் தனிமையில் வருந்தியும் புலம்பியும் தலைவியின் பிரிவு ஆற்றாமையைக் கூறுவதனை,

"நெஞ்சமும் எஞ்சும்-மன் தில்ல எஞ்சி
உள்ளாது அமைந்தோர் உள்ளும்
உள் இல் உள்ளம் உள்ளுள் உவந்தே"14

என்னும் பாடல் வரிகள் தலைவன் பிரிந்து என்னை நினையாது உள்ளன்பு இல்லாத உள்ளத்துடன் இருப்பவரை எண்ணி உவந்து கொள்ளுகின்றது நம்முடைய நெஞ்சம், இம்மாலையையும் ஊரார் கூறும் அலரையும் பொறாத நெஞ்சமும், நம்மை விட்டு போகநின்றது. இனி என்ன செய்வேன் என்று தலைவிப் புலம்புவதை மேற்கண்ட அடிகள் காட்டுகின்றன. மேலும்,

"மாலை நீ கந்து ஆதல் சான்றவர் களைதாராப் பொழுதின்_கண்
வெந்ததோர் புண்ணின் கண் வேல் கொண்டு நுழைப்பான் போல்
காய்ந்த நோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ"15

என்று மாலைக் காலமே நீ எனக்கு பற்றுக்கோடாக அமைந்தவர். என் வருத்தத்தை ஏற்காத காலத்து வெந்த புண்ணில் வேல்கொண்டு நுழைப்பவர் போல, மெய் விரும்புவதற்கு காரணமான காமநோய்களிலே அருந்துகின்ற உள்ளஅறிவையும், கலக்குவதற்கு வந்தாயோ என்பதன் மூலம் தலைமையின் ஆற்றாமையை உணரமுடிகின்றது.

**நெய்தல் நிலத் தலைவி வருத்தம்**

நெய்தல் நிலத் தலைவி வருந்தும் ஆற்றாமையைக் கண்டு வற்புறுத்துகின்ற தோழியிடம் தலைவி தலைவர் நெடுங்காலம் பிரிந்து இருக்கவும் நின் காமநோய் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அதனை பொறுத்துக் கொள்வதற்குரிய மன வலிமையையும் வழி வகைகளையும் அறியமாட்டார்கள். தலைவனுடன் இருந்த காலத்தில் காணமுடியவில்லை எனில் துன்பம் பெருகிய கல்லில் மோதிய கடலின் சிறுநுரையைப் போல துன்பம் பெருகிய நெஞ்சுடன் சிறுகச் சிறுக நானும் இல்லாது போய்விடுவேன். எனக் கூறுவதனை,

“எக்கர் மாஅத்துப் புதுப்பூம் பெருள் சினை
புணர்ந்தோர் மெய்ம்மணல் கமழும் தண்பொழில்
வேழ வெண்பூ வெள்ளுளை சீக்கும்
ஊரன் ஆகலின், கலங்கி
மாரி மலரிற் கண்பனி யுகுமே” 16

என்ற பாடல் உணர்த்துகின்றது. தன்னுள்ளே காதலை மட்டும் இன்றி தாங்கவே இயலாத காம நோயினையும், உண்டாக்கிவிட்டு, என்று புலம்பி தவிக்கின்ற, இந்த நேரத்தில் கூட தன்னை நேரில் கண்டு ஆறுதல் கூறாத தலைவனின் வன்நெஞ்சினை எண்ணி கலங்கி, தன் உயிரினை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு தலைவிக்கு உண்டான துன்பநிலையினை, நெய்தலின் உரிப்பொருளான இரங்குதல் ஒழுக்கம் வெளிப்படுத்துகின்றது.

**காப்புமிகுதிக்கண் நெஞ்சிற்குரைதல்**

தலைவியின் களவொழுக்கத்தை அவளின் தாயறிந்து கொண்டதால் அவளை வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இச்செறித்துக் காவல்காத்தனர். அதனையறிந்த தலைவன் அவளைக் காண இயலாமைக்கு வருந்தினான். வருத்த மிகுதியால் தன்நெஞ்சிற்குக் கூறியதை,

கேட்டிசின் வாழியோ மகிழ்ந ஆற்றுற
மையல் நெஞ்சிற் கெவ்வந்தீர
நினக்கு மருந்தாகிய யான்இனி
இவட்கு மருந்தன்மை நோம்என் நெஞ்சே”17 (ஐங்குறு-59)

என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றது. இவற்றுள் கடற்கரைச் சோலையின் காட்சியையும், மணல் சூழ்ந்த ஊரிலுள்ள தெருவில் கூகையின் சேவல் அதன் பெண் பறவையோடு சென்று மக்கள் இயங்காத பெரிய நாற்சந்தியில் அனைவரும் அஞ்சும் படி கூவிநிற்கும் பின்புலக் காட்சியையும் தலைவன் கூறியுள்ளதை அறியமுடிகின்றது.

இளமை உணர்வுகள், மனக்குழப்பம், மனத்துயர் ஆகியவற்றை விளக்க விரும்பும் புலவர் தனிமொழியைப் படைப்பதாக உளவியலார் கூறுவர்”18 தலைவன் தன் நெஞ்சிற்குரைக்கும் தனிமொழி தலைவியைக் காணமுடியாத நிலையில் ஏற்பட்ட வருத்தத்தின் மேலீட்டால் தோன்றியதென்பதை உணர இயலும். தலைவியின் கண்களைக் கண்ட தலைவன் அவளைக் காணும் முன்னிருந்த கடற்கரையின் நிலையையும், தலைவியைக் கண்டதால் மாறிய கடற்கரையின் தன்மையையும் கூறுகிறான். மீன் பிடிக்கின்ற பரதவரின் இளமை மான்போன்ற பார்வையைக் காணப்பெறாத முன் புன்னைமரமும், அதன் நிழலில் பரப்பியும் உப்பங்கழியில் மேய்ந்த இறால் மீனின் காண்பதற்கு இனிமைமயாக இருந்தன. ஆனால், பரதவர் மகளின் நோக்கங்காணப் பெற்றமையால் இன்றைய நாளில் இரங்கத்தக்ககதாக உள்ளது என மொழிகிறான். இதனை,

“முற்றா மஞ்சள் பசும்புறங் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ்கழி இறவின்
கணங்கொள் குப்பை உணங்குதிறன் நோக்கிப்
புன்னையங் கொழுநிழல் முன்னுய்த்துப் பரப்புப்
துறைநணி இருந்த பாக்கமும் உறைநனி
இனிதுமன் அளிதோ தானே....19

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. ஆகவே, “ஒருவருடைய மனநிலைக்குத் தகுந்தவாறு காட்சிகளின் தன்மை மாறுபடு மென்பது உளவியலார் கருத்தாக அறியலாம்.”20 அவ்வாறு தலைவியைக் காணாத நிலையில் தலைவனின் மனதில் எவ்வித எண்ணமும் இல்லையாதலால் அவன்காணும் காட்சி இனிமையுடையதாகத் தோன்றியது. ஆனால், தலைவியைக் கண்ட பின்னர் அவனின் மனம் அவளையே எண்ணியதால் குழப்பமடைந்தது. இவ்வாறு ஒரே சூழலில் அமைந்த காட்சியே இருவேறு நிலையினைத் தோற்றுவிப்பதை அறியமுடிகின்றது.

## தொகுப்புரை

எட்டுத்தொகை அகப் பாடல்களில் பேசப்படுகின்ற இயற்கை பின்பலமாக கொண்ட மக்களின் வாழ்க்கை பல்வேறு உயிரினங்களோடு இணைத்து காட்சிப்படுத்தி காட்டப்படுகின்றது. கவிஞன் தன் காணுகின்ற காட்சிகள் தன்னுடைய உணர்ச்சிகள், கருத்துக்கள் முதலிய வற்றை வெளிப் படுத்துவதற்காக இயற்கை பொருட்களான நீர், நிலம், காற்று, ஆகாயம், பறவைகள், தாவரங்கள், விலங்குகள் போன்ற பல்வேறு வகையான பொருட்களைக் கொண்டு தம் உள்ளத்துக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றான். ஆகவே, நெய்தல் நிலத்தில் தலைவனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவியின் பிரிவுவாற்றாமை, வருந்தும் காட்சிகள் இப்பொருளை பின்புலமாகக் கொண்டு காட்சியையும், தலைவியின் பிரிவுவாற்றாமை பற்றி ஆராய்ந்துள்ளது.

## சான்றென் விளக்கம்


1. தொல்.பொருள்.அகத்.நூ.5-4
2. ஐங்குறுநூறு, பா. 101.3
3. குறுந். பா.197: 2-5
4. ஐங்குறுநூறு, பா. 451: 1-2
5. மேலது, பா. 141,
6. சிறுபாண். வரி 170-171
7. நற்றிணை, பா.152:6-7.
8. மேலது, பா.387-12.
9. ஐங்குறுநூறு 192
10. குறுந்தொகை,பா.310 : 1-4
11. நற்றிணை, பா.385. 1-6
12. சிலம்பு, கானல்வரி : 16 : 5-8. 188-191.
13. குறுந்தொகை, பா. 103 : 4-5
14. கலித்தொகை, 118: 20-23
15. மேலது. 118: 24-25
16. ஐங்குறுநூறு,, வேழப் பா.19
17. மேலது, பா. 59

18.நற்றிணை, பா.319:1-5.

19.ஆ.இராமகிருட்டினன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.134

20.நற்றிணை, பா.101:1-6